# சாந்தி குரு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

(முன்னர் ஆர்சிஎல் ரீடெய்ல் லிமிடெட்)
CIN L52330TN2010PLC077507
பதிவு அலுவலகம்: சப்னா டிரேட் சென்டர், 10வது மாடி, 10பி/2 எண்.109, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை – 600 084.
Tel: 044-40508024, E-mail: rclretail@gmail.com

## பொது அறிவிப்பு– 13வது வருடாந்திர பொதுக்கூட்டம்

கம்பெனிகள் சட்டம், 2013 ("சட்டம்") மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள், 2015 ("பட்டியல் விதிமுறைகள்") மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 10/2022 மற்றும் பிற சுற்றறிக்கைகள் ("MCA") மற்றும் 05.01.2023 தேதியிட்ட செபி சுற்றறிக்கை SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 (ஒட்டுமொத்தமாக "தொடர்புடைய சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றுக்கு இணங்க, ஏஜிஎம் அறிவிப்பில் ("அறிவிப்பு") குறிப்பிடப்பட்டுள்ளபடி வணிகங்களைப் பரிவர்த்தனை செய்ய, கம்பெனி உறுப்பினர்களின் 13வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 15, 2023 அன்று இந்திய நேரப்படி நண்பகல் 12.00 மணிக்கு காணொலி காட்சி (VC)/பிற ஒலி ஒளி வழிமுறைகள் (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள், சட்டத்தின் 103வது பிரிவின் கீழ் குறைந்தபட்சத்தை பங்கேற்கும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

கட் ஆப் தேதியான 8.9.2023 அன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயர்களில் உள்ள நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு செய்ய உரிமை உள்ளவர் ஆவார். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் (சிடிஎஸ்எல்) சேவைகளுக்கு கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது. VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்த விரிவான வழிமுறைகளுக்கு உறுப்பினர்கள்/பங்குதாரர்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பை படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 20ன்படி, 2022–23 ஆண்டு அறிக்கை மற்றும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு ஆகியவை மின்னணு முறையில் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் அல்லது கம்பெனி/பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு 22.08.2023 அன்று அனுப்பப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆவணங்கள் பிஎஸ்இ லிமிடெட் வலைத்தளம் www.bseindia.com மற்றும் சிடிஎஸ்எல் வலைத்தளம் https://wwww.evotingindia.comல் கிடைக்கின்றன. உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில்:

i) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு செப்டம்பர் 11, 2023 திங்கட்கிழமை இந்திய நேரப்படி காலை 10.00 மணி தொடங்கி செப்டம்பர் 14, 2023 வியாழக்கிழமை இந்திய நேரப்படி மாலை 05.00 மணிக்கு முடிவடைகிறது. மேற்சொன்ன காலத்திற்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படமாட்டாது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ii) இந்த காலத்தில், தற்போதைய உறுப்பினர்கள் மற்றும் அறிவிப்பு அனுப்பிய பின்னர் பங்குகளை பெற்று கம்பெனியின் உறுப்பினர்கள் ஆனவர்கள், கட் ஆப் தேதியான 8.9.2023 அன்று காகித வடிவில் அல்லது பத்திர வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள் சிடிஎஸ்எல் மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

iii) வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் நடைபெறும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை.

iv)பங்குதாரர்கள்/உறுப்பினர்கள் உள்நுழைவின் கீழ் https://www.evotingindia.comல் சிடிஎஸ்எல் மின்னணு வாக்குப்பதிவு முறையில் உறுப்பினர்கள் அணுகலாம். கூட்ட நாளில் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேர அதே இணைப்பு செல்லுபடியாகும். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு செயல்முறைக்கான விரிவான வழிமுறைகள், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் சேருதல் மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு ஆகியவை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கொடுக்கப் பட்டுள்ளன.

v) மின்னணு வாக்களிப்பிற்கான உள்நுழைவு சான்றுகளைப் பெற டெபாசிட்டரிகளிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி தேவையான விவரங்களையும் ஆவணங்களையும் ஆர்டிஏவின் மின்னஞ்சல் ஐடி kandhimathi@cameoindia.comக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

vi) வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் உறுப்பினர்களின் ஆய்வுக்கு கிடைக்கின்றன. அது குறித்து அவர்கள் கம்பெனியின் மின்னஞ்சல் ஐடி rclretail@gmail.comக்கு எழுதலாம்.

vii) வருடாந்திர பொதுக்கூட்டத்தில் ''.தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு'' நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடைபெறுவதை ஆராய திரு. பங்கஜ் மேத்தா, பிராக்டிசிங் கம்பெனி செயலாளர், பார்ட்னர் , M/S. ஏ.கே. ஜெயின் & அசோசியேட்ஸ், கம்பெனி செயலாளர்கள், அவர்கள் ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

viii) ஆய்வாளரின் அறிக்கையுடன் அறிவிக்கப்பட்ட முடிவுகள் சிடிஎஸ்எல் வலைதளம் www.evotingindia.comல் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபரால் எழுத்துப்பூர்வமாக முடிவு அறிவிக்கப்பட்ட உடனேயே வைக்கப்படும்.

ix) 13வது வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்க செப்டம்பர் 9, 2023 முதல் செப்டம்பர் 15, 2023 வரை (இரண்டு நாட்களும் உள்ளடக்கியது) மூடப்படும்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வது மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான ஏதேனும் வினவல்/தெளிவுபடுத்தல் அல்லது பிரச்சினைகளுக்கு, நீங்கள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") மற்றும் உதவி பிரிவின் கீழ் www.evotingindia.comல் கிடைக்கும் மின்னணு வாக்களிப்பு கையேட்டைப் பார்க்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் எழுதலாம் அல்லது திரு. ராகேஷ் தல்வி (022-23058542) அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

குழுவின் ஆணைப்படி
சாந்தி குரு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டிற்காக
இடம்: சென்னை ரத்தன்சந்த் லோதா
தேதி: 21.08.2023 தலைவர்
(DIN: 01534269)